போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ அமைச்சு

2019 ஆம் ஆண்டின் செயற்பாட்டு அறிக்கை

07 ஆவது மாடி,
செத்சிரிபாய, *II* ஆம் கட்டம்
பத்தரமுல்லை

2020 – ஜூலை

உள்ளடக்கம்

அத்தியாயம் *01* – நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு **05**

1.1 அறிமுகம் 05
1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள் 07
1.3 பிரதான செயற்பாடுகள் 08
1.4 நிறுவன விளக்கப்படம் 09
1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் 10
1.6 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் 10
1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் 10

அத்தியாயம் *02* - முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம் **11**

சிறப்பு அடைவுகள் சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகளை சுருக்கமாக விளக்குக 11

அத்தியாயம் *03* - வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை **15**

3.1 நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று 15
3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று 17
3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று 18
3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 21
3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை 21
3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை 21
3.7 நீ. பி. குறிப்பு *208* பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/மாவட்டச் செயலகம்/மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு 21
3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை 22
3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை (இணைப்பு *- 1*)

அத்தியாயம் *04* - செயலாற்றுகை சுட்டிகள் **23**

4.1 நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்) 23

அத்தியாயம் *05* – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (*SDG*) அடையும் செயலாற்றுகை **25**

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டுக 25
5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக 26

அத்தியாயம் *06* – மனித வள விபரம் **27**

6.1 பதவியணி முகாமைத்துவம் 27
6.2 பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக 27
6.3 மனித வள அபிவிருத்தி 27

அத்தியாயம் *07* – இணக்க அறிக்கை **30**

அத்தியாயம் 01

1.1 அறிமுகம்

போக்குவரத்து என்பது ஏதேனுமொரு நாட்டின் அபிவிருத்திக்காக அத்தியவசியமாக தேவைப்படுகின்ற சேவையாகும். படிப்படியாக நடுத்தர வருமானம் பெறும் நாடாக உருவாகியுள்ள இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தில் ஏற்பட்ட அபிவிருத்தியுடன் போக்குவரத்து சேவையிலும் தொடர்வாரியானதொரு அபிவிருத்தி ஏற்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக கடந்த காலத்துக்குள் தேசிய வருமான வளர்ச்சியுடன் மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தப்பட்டமைக்கு நிகராக தனியார் துறை வாகனங்களின் அளவில் அதிகரிப்பு ஏற்பட்டதனால் அதன் பலனாக பொது போக்குவரத்தை விட்டு மக்கள் விலகிச் செல்லும் போக்கு காணப்பட்டது. இதனால் வீதி நெரிசல், வளி மாசடையும் மட்டம் உயர்வதைல் வீதி விபத்துக்கள் அதிகமாதல் போன்ற பொருளாதார மற்றும் சமூக சிக்கல்கள் பல ஏற்பட்டதுடன் போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ அமைச்சாக அன்றாடம் மக்களின் வாழ்வில் தாக்கம் விளைவிக்கின்ற இந்த பிரச்சினைகளுக்காக நிலைப்பாடு ரீதியான தீர்வுகளைக் கண்டறியும் தேவைப்பாட்டினை அடையாளம் காணப்பட்டுள்ளது.

நாட்டின் மேம்பாட்டினை மையமாகக் கொண்ட அமைச்சாக இந்த அமைச்சின் மூலம் அதன் நோக்கெல்லைக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை திட்டமிடுதல் , செயல்படுத்துதல் , பின் தொடர்தல் மற்றும் மதிப்பிடுதல் தேவைகளுக்கேற்றவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட தேசிய போக்குவரத்து கொள்கை நிபுணத்துவ குழுவுக்கு சமர்ப்பித்து தற்போதைய தேவைகளுக்கேற்றவாறு திருத்தம் செய்யப்பட்டிருப்பதுடன், சமீப காலத்தில் அது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும். அதேபோன்று தேவைக்கேற்றவாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டம், மோட்டார் வாகன போக்குவரத்து சட்டம் திருத்தம் செய்யப்படும். அதன் மூலம் சட்டரீதியான தடங்களைக் குறைத்து மக்களுக்கு வினைத்திறன் வாய்ந்த போக்குவரத்து சேவையை வழங்குதல் இந்த அமைச்சின் நோக்கமாக இருப்பதுடன், அதற்கான கருத்திட்டங்கள் பல ஏற்கனவே செயற்படுத்தப்படுகின்றன.

கொழும்பு புறநகர் புகையிரத வீதிக் கருத்திட்டம் மற்றும் கொழும்பு புறநகர் புகையிரத வினைத்திறனை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் கீழ் கொழும்பு புறநகர் புகையிரத வீதிகளைப் போன்று பிரதான வீதிகளில் கண்டறியப்பட்ட பகுதிகளும் மின் புகையிரத போக்குவரத்துக்கு பொருத்தமானவாறு அபிவிருத்தி செய்யப்படும். அதேபோன்று குருணாகளை ஹபரணை புதிய புகையிரத வீதியின் நடவடிக்கைகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பயணிகள் பேருந்து சேவைகள் நவீனமயப்படுத்தும் கருத்திட்டங்களாக கீழ் தளம் கொண்ட சொகுசு வாய்ந்த பேருந்துகள் பயணிகள் போக்குவரத்திற்கு ஈடுபடுத்துதல். முன் கொடுப்பனவு அட்டை முறை பொது

போக்குவரத்துக்கு அறிமுகப்படுத்துவது உள்ளிட்ட நவீன தொழில்நுட்ப பொது போக்குவரத்துக்கு பயன்படுத்தும் கருத்திட்டங்கள் பல தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அமைச்சின் நிதிசார் நிர்வாகம் பிரதான கணக்கீட்டு அலுவலரின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்படுவதுடன் அதற்காக அமைச்சிற்குரிய நிறுவனங்களின் பங்கேற்பு வழக்கமாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு திட்டமிடப்பட்டவாறு காலாண்டு ரீதியாக நிதி மற்றும் நிர்வாக செயற்பாடுகளை முறைசார்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அமைச்சு மற்றும் அதற்குரிய நிறுவனங்கள் அதற்குரிய கருத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகளை திட்டமிடல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் கீழ் முக்கியமாக கருத்திட்ட முன்மொழிவுகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல், தேவைக்கேற்றவாறு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் , அபிவிருத்தித் கருத்திட்டங்கள் அரச முதலீட்டுத் திட்டத்திற்கு உட்படுத்துதல், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்இ உரிய நிறுவனங்களுக்கு முன்னேற்றம் தொடர்பாக அறிக்கையிடல், செயலாற்றுகை அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல், இணைப்பாக்கம் மற்றும் செயல்முறைத் திட்டங்களைத் தயாரித்தல் போன்ற நடவடிக்கைகளும் திட்டமிடல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அமைச்சுக்குரிய தாபன பிரிவின் மூலம் அலுவலர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வழங்குவதன் மூலம் வினைத்திறன் வாய்ந்த முறையில் மனித வளங்கள் வழங்குவதை உறுதிப்படுத்துதல், தாபன ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்ளல் ஆட்சேர்ப்பு,ஆட்சேர்ப்பு நடைமுறைத் தயாரித்தல், ஊழியர் ஒழுக்காற்று நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் நிர்வாகத்துக்கு தேவையான உள்ளக சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டு மிகவும் வினைத்திறன் வாய்ந்த அரசாங்க சேவைக்காகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த காரணங்களுக்கமைய 2019 ஆம் வருடத்துக்குள் குறிப்பிடத்தக்க செயல்திறனை அடைவதற்கு முடியுமாக உள்ளது .

தொலைநோக்கு

இலங்கைப் பிராந்தியத்தினுள்

முன்னணி பொதுமக்கள் மையப் போக்குவரத்து திட்டத்தினைக் கொண்ட நாடாகத் திகழச் செய்தல்.

பணிக்கூற்று

பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு நவீன தொழில்நுட்ப மூலோபாயங்களை உபயோகித்து

மிகவும் உயர் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை செயற்படுத்துதல், மேம்பாடு மற்றும் நிலைபேறாக முன்னெடுத்துச் செல்லுதல்.

1.3 பிரதான செயற்பாடுகள்

i. பயணிகள் போக்குவரத்து விடயம் தொடர்பில், இலங்கைப் புகையிரதத் திணைக்களம், இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை, தேசியப் போக்குவரத்து வைத்திய நிறுவகம், மோட்டார் வாகனத் போக்குவரத்து திணைக்களம், தேசியப் போக்குவரத்து ஆணைக்குழ, வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் கம்பனி, வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை போன்ற நிறுவகங்களின் விடயங்களுக்கான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் திட்டமிடுதல், பின்னூட்டுதல், மதிப்பிடுதல், அதன் விடயங்களுக்குரிய ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் கண்காணித்தல்

ii. புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒன்றினைந்த பயணிகள், பண்டப் புகையிரதப் போக்குவரத்து சேவைகளை வினைத்திறமையாக நடாத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் புகையிரத உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தியும் புகையிரத சேவைகளை வழங்கலும்

iii. பயணிகளுக்கு படகுத்துறைச் சேவைகளை வழங்குதல்.

iv. பாதுகாப்பானதும் நம்பகத்தகுந்ததுமான பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல்.

v. சூழல் நேயமிக்க போக்குவரத்து முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல்.

vi. தனியார் போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குபடுத்துதல்.

vii. புதிய புகையிரதப் பாதைகளை நிர்மாணித்தல், இருக்கின்ற புகையிரதப் பாதைகளை விரிவாக்குதலும் அதற்குரிய காணிகளை கையகப்படுத்துதலும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்தல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும்

viii. மோட்டார் ஊர்தி வாகனங்களின் பதிவும், அனுமதிப் பத்திரம் வழங்குதல்.

ix. சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.

x. மோட்டார் ஊர்தி வாகனங்களுக்கான சட்டதிட்டங்கள், வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் முகாமை செய்தல்.

xi. பச்சைவீட்டு காற்று வெளியேற்றப்படுதலைக் குறைப்பதற்காக போக்குவரத்துத் துறை பங்களிக்கக்கூடிய வகையில் உபாயமுறையிலான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்

xii. இலங்கை புகையிரத திணைக்களம், இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் கம்பனி, வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை போன்ற திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட தாபனங்களின் கையளிக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்களுக்குரிய நடவடிக்கைகள் மேற்பார்வை செய்தல்.

போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ அமைச்சு



1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

1. இலங்கைப் புகையிரதத் திணைக்களம்
2. மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்

1.6 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்

1. இலங்கைப் போக்குவரத்துச் சபை
2. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
3. தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம்
4. வரையறுக்கப்பட்ட லக்திவ எஞ்சினியரிங் (தனியார்) கம்பனி
5. வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (இருப்பின்)

கருத்திட்டத்தின் பெயர்	கொடைவழங்கும் முகவர்	கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – ரூபா மில்.	கருத்திட்டக் காலம்
மாத்தறை – கதிர்காமம் புதிய புகையிரத வீதிக் கருத்திட்டம்	Exim Bank (China)	அ.டொ. மில்லியன் 278.2	2013.08.01 ஆந் திகதி முதல் தவறுகளை தடுப்பதற்கான காலவெல்லை உள்ளிட்ட 2020.05.26
குருணாகலை – தபுளை ஊடாக ஹபரணை புகையிரத வீதிக் கருத்திட்டம்	China State Construction Engineering Corporation Ltd	ரூபா.மில்லியன் 172,278.00 (947 US$ Mn. +Rs. Mn. 7,500)	04 வருட கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர்
கொழும்பு புறநகர் புகையிரத கருத்திட்டம்	ஆசியா அபிவிருத்தி வங்கி இலங்கை அரசாங்கம்	ரூபா.மில்லியன் 1,456.50 ரூபா.மில்லியன் 9,798.04	06 வருடங்கள்
புகையிரத வினைத்திறன் மேம்படுத்தும் கருத்திட்டம்	ஆசியா அபிவிருத்தி வங்கி இலங்கை அரசாங்கம்	ரூபா.மில்லியன் 28,232.00 ரூபா.மில்லியன் 5,646.40	05 வருடங்கள்

அத்தியாயம் 02

போக்குவரத்து துறையின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு..........

நாடொன்றினை அபிவிருத்தி செய்யும்போது அந்நாட்டில் வாழுகின்ற மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டியிருப்பதுடன் பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாக தரமானதொரு வளர்ச்சி ஏற்படவேண்டும். உற்பத்தி காரணிகள் உற்பத்தி நிறுவனங்களுக்கு போக்குவரத்து செய்வதும், ஆக்கப்பெற்ற பொருட்கள் மற்றும் சேவைகள் சந்தைக்கு போக்குவரத்து செய்வதும் அதற்காக தேவைப்படுகின்ற தொழிற்படை சரியான முறையில் இடம்பெயரச் செய்வதும் பொருளாதார அபிவிருத்தியின் போது இடம்பெற வேண்டும். பொருளாதாரத்திற்குள் உற்பத்தி காரணிகளைத் திரட்டுதல், உற்பத்தி, விநியோகம் மற்றும் அதற்குத் தேவைப்படுகின்ற தொழிற்படை இடப்பெயர்வு தேவைப்பாடுகளின்போது போக்குவரத்து முக்கிய கடமைப்பாங்கினை நிறைவேற்றுவதுடன் போக்குவரத்தின் வினைத்திறன் மற்றும் தரம் பொருளாதார வளர்ச்சி வேகத்தினை முடிவு செய்யப்படும். அதற்கமைய போக்குவரத்தானது, நாடொன்றின் அபிவிருத்தியினைத் தீர்மானிக்கின்ற பிரதான காரணியாகக் குறிப்பிட முடியும்.

இலங்கையில் போக்குவரத்து விடயத்துடன் தொடர்புடைய பிரதான நிறுவனமான போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சின் மூலம் போக்குவரத்து துறையுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து பொதுமக்களுக்கு நேரடி பயன்கள் கிடைக்கும் கருத்திட்டங்களை அடையாளங் காணல், தயாரித்தல் செயல்படுத்துதல் மற்றும் பின்தொடர்தல் இடம்பெறுவதுடன் நிலைப்பாட்டுடைய போக்குவரத்து சேவையொன்றினை அடையும் பொருட்டு வழக்கமாக செயல்பட்டு வருகின்றது. அதற்கமைய 2019 ஆம் வருடத்துக்குள் போக்குவரத்துத் துறையில் முனைப்பானதொரு அபிவிருத்தியினை எய்துவதற்கு இந்த அமைச்சிற்கு முடியுமாகவுள்ளது.

போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சின் மூலம் பிரதான புகையிரத கருத்திட்டங்கள் பல தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கை தென் பிரதேசத்தில் போக்குவரத்துத் தேவைப்பாடுகளை அடையாளம் கண்டு செயற்படுத்தப்பட்ட மாத்தறை பெலிஅத்தை புகையிரத வீதி அபிவிருத்தி கருத்திட்டம் இவற்றுல் சில முக்கியமானவைகளாகும். இந்தத் கருத்திட்டத்தின் நிர்மாணப்பணிகள் இந்த வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன், தற்போது புகையிரத போக்குவரத்து நடவடிக்கைகள் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகின்றன.

அடுத்து வரும் 20வருட காலத்தினை இலக்காகக் கொண்டு ஆசியா அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற கொழும்பு புறநகர் புகையிரத கருத்திட்டத்தின் (CSRP) நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் இந்த கருத்திட்டத்தின் கீழ் களனிவெளி வீதி, பிரதான வீதி, கடலோர வீதி, மலைநாட்டு வீதிகளில் அடையாளம் காணப்பட்ட பகுதிகள் புகையிரத மின்மயத்துக்கு தேவையானவாறு அபிவிருத்தி செய்யப்படும். மேற்குறிப்பிட்ட கருத்துக்கு இணைந்து செயற்படுகின்ற புகையிரத வினைத்திறன் மேம்படுத்தும் கருத்திட்டம் (REIP) ஆசியா அபிவிருத்தி வங்கிக் கடன் உதவியின் கீழ் செயல்படுத்தப்படுகின்ற புகையிரத கருத்திட்டமாகும். இந்த கருத்திட்டத்துக்குரிய அடிப்படை நடவடிக்கைகள் தற்போது முடிவு செய்யப்பட்டிருப்பதுடன் கருத்திட்டத்தின் மூலம் புகையிரத செயற்பாட்டு வினைத்திறமையினை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும். குருணாகலை ஹபரணை புதிய புகையிரத வீதி கருத்திட்டம் 84.5 கிலோ மீட்டராக இருப்பதுடன் இங்கு காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது முடிவு செய்யப்பட்டு வருகின்றன.

இலங்கை புகையிரத திணைக்களத்தின் மூலம் கருத்திட்டங்கள் பல 2019 ஆம் ஆண்டுக்குள் செயல்படுத்தப்பட்டன. இந்த கருத்திட்டங்களின் பெறுபேறாக புகையிரத வருமானமும் கோடிட்டுக் காட்டகூடிய வளர்ச்சியினை ஏற்படுத்தியது. 2018 ஆம் ஆண்டுக்குள் புகையிரத திணைக்களத்தின் மொத்த வருமானம் ரூ. 7,412.50 மில்லியன் ஆக இருந்ததுடன் 2019 ஆம் வருடத்துக்குள் அது 7,859.20 ஆக இருந்தது. அதற்கமைய 2019ஆம் வருடத்துக்குள் மொத்த வருமானம் 6% ஆல் வளர்ச்சியடைந்துள்ளது. 2019 ஆம் வருடத்துக்குள் புகையிரத திணைக்களத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களாக அமெரிக்காக டொலர் 91.26 மில்லியன்கள் செலவு செய்து அபிவிருத்தி செய்வதற்குள்ள மஹவை-ஓமந்தை புகையிரத வீதி கருத்திட்டத்தினை குறிப்பிட முடியும். இந்த கருத்திட்டத்தின் கடன் ஒப்பந்தத்திற்கு 2019.07.18 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது. பொல்கஹவெலை – குருணாகலை வீதியின் வீதி சமிகைஞ முறைமை நிறுவுதல், 200 புகையிரதக் கடவைத் தடை கருத்திட்டத்திலிருந்து 170 புகையிரதக் கடவைத் தடைகளை நிறைவுசெய்தல், 200 புகையிரதம் பெட்டிகளை மறுசீரமைப்பு கருத்திட்டத்திலிருந்து 140 புகையிரதப் பெட்டிகளை நிறைவு செய்தல், ஆகியன புகையிரத சேவையின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளன. இந்த அனைத்தும் புகையிரதக் கருத்திட்டங்களின் மூலம் புகையிரத சேவையின் கீழ் தற்போது வழங்கப்படுகின்ற பயணிகள் சதவீதம் 10% வீதம் வரை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படும்.

அரச பேருந்து பயணிகள் போக்குவரத்து சேவையின் முதன்மையாளரன இலங்கை போக்குவரத்து சபை 2019 ஆம் ஆண்டிலும் ஓட்டத்திற்காக கிட்டத்தட்ட 5,854 பேருந்துகள் வழங்கி நாளொன்றுக்கு பொதுவாக கிட்டத்தட்ட 5,079 பேருந்துகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தி மக்களின் போக்குவரத்துத் தேவைப்பாடுகளை நிறைவேற்றி வருகின்றது. அரச பேருந்துகள் பயணிகள் போக்குவரத்து சேவையில் முதன்மையாளரான இலங்கை போக்குவரத்துச் சபை 2019 ஆம் ஆண்டிலும் ஓட்டத்துக்காக பேருந்துகளை தற்போதுள்ள காலங்கடந்த பேருந்துகள் போக்குவரத்துக்கு பதிலமர்த்திடுவதற்காக நவீன வசதிகளைக் கொண்ட பேருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் இல்லாமை இலங்கை போக்குவரத்து சபையிடமுள்ள பிரதான சவாலாகும்.எவ்வாறாயினும் 2019 ஆம் வருடத்துக்குள் கிட்டத்தட்ட 334 பேருந்துகள் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்ததுடன் இந்தியா கடன் உதவித் திட்டத்தின் கீழ் 600 பேருந்துகளும் 2019 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கமைய அனைத்து வசதிகளையும் கொண்ட 80 பேருந்துகளையும் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் தொழிற்படுத்தப்பட்டு வருகின்றன.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மூலம் ஏறக்குறைய 3,200 பேருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு பயணிகள் போக்குவரத்து சேவையினை வினைத்திறனாக்குவது குறித்து அது பங்களிக்கிறது. பொதுமக்களிடையே பிரபலமான சேவையான சிசுசெறிய 56 புதிய சேவைகள் 2019 ஆம் வருடத்துக்குள் ஆரம்பிக்கப்பட்டு மொத்த சேவைகளின் எண்ணிக்கை 1,419 வரை அதிகரித்து நாடு பூராவுமுள்ள ஏறத்தாழ 90,000 சிறார்களுக்கு சேவை வழங்குகின்றது. அதேபோன்று கெமிசறி மற்றும் நிசிசெறிய சமூக சேவைகளும் வழக்கமாக செயற்படுத்தப்படுகின்றன. அதேபோன்று பயணிகளுக்காக முன் கொடுப்பனவு அட்டைகள் முறைமைய ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், GPS மூலம் பேருந்துகளை ஒழுங்குபடுத்தல், ஒருங்கிணைந்த நேர அட்டவணைகளை செயல்படுத்துதல், பாடசாலை மூடு வண்டிகள் மற்றும் முச்சக்கரவண்டி ஒழுங்குமுறைப்படுத்தும் செயல்முறையினைத் தயாரித்தல் இந்த நிறுவனத்தின் பங்களிப்பின் அடிப்படையில் செயற்படுகின்ற இன்னுமொரு கருத்திட்டமாகும்

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மூலம் 2019 வருடத்துக்குள் மோட்டார் வாகனங்களை 367,303 பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், 675,018 வாகன கைமாற்றல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று அனைத்து ரக 917,724 சாரதி உரிமங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதேபோன்று சாரதி அனுமதிப்பத்திரங்கள் Online முறை மூலம் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளும் நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக வாகன புகை உமிழ்வு நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் கீழ் வாகனங்களுக்கான தரப்படுத்தப்பட்ட புகை உமிழ்வு நிலைமைகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் கம்பனியின் மூலம் 2019 ஆம் ஆண்டுக்குள் இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத 172 பேருந்துகள் பழுதுபார்க்கப்பட்டு போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுளளன. அதேபோன்று வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் மூலம் மக்கள் விழிப்பூட்டும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் செயல்படுத்தப்படுகின்றது.

மக்கள் அதிகமாக பொது போக்குவரத்து சேவை நோக்கி கவரச் செய்தல் இந்த அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ள பிரதான சவாலாகும். மக்களுக்குப் பயன்படக்கூடிய வினைத்திறன் வாய்ந்த போக்குவரத்து சேவையொன்றினை செயற்படுத்துவதன் மூலமே போக்குவரத்துத்துறை தொடர்பில் தாக்கம் விளைவித்துள்ள அனைத்து சவால்களுக்கும் மற்றும் ஏனைய சிக்கல்களுக்கும் தீர்வு காண முடியும். இதற்காக போக்குவரத்துத்துறையில், அபிவிருத்தியடைந்த நாடுகள் பின்பற்றியுள்ள நவீன தொழில்நுட்பம் எமது நாட்டின் போக்குவரத்து துறைக்கு பொருத்தமான முறையில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அதேபோன்று எமது நாட்டுக்கும், மக்களுக்கும் பொருந்தக்கூடிய போக்குவரத்து சேவையினை நிறுவுவதற்காக அறிவியல் ரீதியான ஆராய்ச்சி முறைகளில் நமது கவனம் செலுத்தப்பட வேண்டும். எமது பல்கலைக்கழக முறைமைக்குள் போக்குவரத்துடன் தொடர்பான ஆராய்ச்சிகள் காணக்கூடியதாக இருப்பினும் அது தேசிய போக்குவரத்தை மேம்படுத்துவதில் குறைந்தளவு பங்களிப்பே காட்டுகின்றது. அதேபோன்று இலங்கைக்குள் பயணிகள் போக்குவரத்து, சரக்கு போக்குவரத்து, கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து இடையிலும் போக்குவரத்துடன் தொடர்பான நிறுவனங்களுக்கு இடையேயும் காணப்படுகின்ற பரஸ்பர தொடர்பு மேலும் பலப்படுத்தப்பட வேண்டும். இந்த அனைத்து சவால்களையும் வெற்றி கொள்வதற்காக தேசிய கொள்கையொன்றினை நாம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அதற்காக சாதகமான நடவடிக்கைகள் சில எம்மால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், எதிர்வரும் காலங்களுக்குள் அதனை யதார்த்தமாக்குதல் இந்த அமைச்சின் எதிர்பார்ப்பாகும்.

என்.பீ.எம். ரணதுங்க

செயலாளர்

போக்குவரத்து அமைச்சு

அத்தியாயம் 03

2019 டிசம்பர் 31 முடிவுற்று வருடத்துக்கான ஒட்டு மொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று

ஏசீஏ-எப்

2019 டிசம்பர் 31 முடிவுற்ற காலத்திற்கான

நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ரூபா

வ.செ. திட்டம் 2019		குறிப்பு	உண்மையான 2019	உண்மையான 2018	
-	**வருமான பெறுகைகள்**		24,049,292,729	19,964,333,668	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ -1
-	உள்ளூர் பொருட்கள், சேவைகளுக்கான வரி	2	-	-	ஏசீஏ -1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரி	3	-	-	ஏசீஏ -1
-	வரியல்லா வருமானம் மற்றும் பிற	4	24,049,292,729	19,964,333,668	
-	**மொத்த வருமான பெறுகைகள் (அ)**		24,049,292,729	19,964,333,668	
-	**வருமானமல்லாத பெறு கைகள்**		**-**	**-**	
-	திறைசேரி முற்பணம்		17,213,285,456	14,565,402,261	ஏசீஏ -3
-	வைப்புகள்		12,140,695	3,639,352	ஏசீஏ -4
-	முற்பணக் கணக்குகள்		11,581,564	10,053,831	ஏசீஏ - 5/5(அ)
-	வேறு பெறுகைகள்		18,920,731	5,227,548	
-	**மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)**		**17,255,928,445**	**14,584,322,993**	
-	**மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ = (அ)+(ஆ)**		**41,305,221,174**	**34,548,656,661**	

	கழி : செலவினம்				
-	**மீண்டெழும் செலவினம்**		**-**	**-**	
153,700,000	வேதனாதிகள், சம்பளங்கள், பிற ஊழிய நன்மைகள்	**5**	147,332,392	128,983,448	
172,130,000	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் உதவு	**6**	169,060,848	141,180,131	ஏசீஏ - 2(ii)
14,237,870,000	தொகை, மானியம் மற்றும் மாற்றல்கள்	**7**	13,859,861,283	11,629,058,285	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	**8**	-	-	
-	ஏனைய மீணடெழும் செலவினம்	**9**	-	-	
14,563,700,000	**மொத்த மீண்டெழும் செலவினம் (ஈ)**		**14,176,254,523**	**11,899,221,864**	
	மூலதனச் செலவினம்				
3,700,000	மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு	**10**	845,194	2,213,294	
9,735,000,000	மூலதன சொத்துகளை கையகப்படுத்தல்	**11**	4,133,251,654	4,946,578,858	
4,030,800,000	மூலதன மாற்றல்கள்	**12**	2,659,618,807	2,395,763,000	ஏசீஏ - 2(ii)
-	நிதி சொத்துக்களை கையகப்படுத்துதல்	**13**	-	-	
1,300,000	திறன் மேம்பாடு	**14**	639,200	1,116,500	
-	பிற மூலதன செலவுகள்	**15**	-	-	
13,770,800,000	**மொத்த மூலதன செலவினம் (உ)**		**6,794,354,855**	**7,345,671,652**	
	பிரதான பேரேட்டு செலவுகள் (ஊ)		**23,082,546**	**16,027,264**	
	வைப்புக் கொடுப்பனவு		**12,820,733**	**3,796,883**	ஏசீஏ -4
	முற்பணக் கொடுப்பனவு		10,261,813	12,230,381	ஏசீஏ - 5/5(அ)
	மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)		20,993,691,925	19,260,920,780	
28,334,500,000	**2019 டிசம்பர் 31இல் முற்பண மீதி ஏ = (இ -எ)**		20,311,529,249	15,287,735,881	

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ - பீ

2019 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு

நிதி நிலைமை பற்றிய கூற்று

		உண்மையான	
	குறிப்பு	**2019**	**2018**
		ரூபா	ரூபா
நிதி அல்லாத சொத்துக்கள்			
சொத்து, பொறித்தொகுதி உபகரணம்	ஏசீஏ -6	41,141,155,251	36,969,295,449
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள் காசு	ஏசீஏ - 5/5(அ)	34,217,415	35,537,165
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ -3	713,805	-
மொத்த சொத்துக்கள்		**41,176,086,471**	**37,004,832,614**
நிகர சொத்து / பங்கு			
நிகர சொத்து		33,507,021	35,506,809
சொத்து, பொறித்தொகுதி உபகரண ஒதுக்கு		41,141,155,251	36,969,295,449
வாடகை, பணி முற்பண ஒதுக்கு	ஏசீஏ -5(ஆ)		
நடைமுறை பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்கு	ஏசீஏ -4	710,394	30,357
முற்பண மீதி	ஏசீஏ -3	713,805	-
மொத்த பொறுப்புகள்		**41,176,086,471**	**37,004,832,615**

மேலே உள்ள ஏ.சி.ஏ. வடிவத்தில் எண் 1 முதல் 6 வரை சமர்ப்பிக்கப்பட்ட விரிவான கணக்கு அறிக்கைகள் மற்றும் 76 முதல் 96 வரையான பக்கங்களில் வழங்கப்பட்ட கணக்குகளுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இறுதிக் கணக்கின் புள்ளிவிவரங்கள், தொடர்புடைய கணக்கியல் குறிப்புகள் மற்றும் பிற கணக்கியல் தகவல்கள் திறைசேரி கணக்கு புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளதுடன் இந்த புள்ளிவிவரங்களுடன் உடன்படுகின்றன என்பதை, நாங்கள் இதன் மூலம் சான்றளிக்கிறோம்.

....
பிரதான கணக்கீட்டு அலுவலர்
பெயர் :என்.பீ.எம். ரணதுங்க
பதவி: செயலாளர்
திகதி : 2020/08/18

N.B.M. Ranatunge
Secretary
Ministry of Transport
7th floor, Sethsiripaya (Stage II)
Battaramulla

....
கணக்கீட்டு அலுவலர்
பெயர் :
பதவி :
திகதி :

....
பிரதான நிதி அலுவலர் / பிரதான கணக்காளர்
பெயர்:டீ.ஏ.டீ.வீரசிங்ஹ
திகதி : 2020/08/18

D. A. T Weerasinghe
Chief Financial Officer (Covering)
Ministry of Transport Management Services
7th Floor, Sethsiripaya (Stage II)
Battaramulla.

3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ - சீ

2019 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலப்பகுதிக்கான

காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மையான	
	2019	**2018**
	ரூபா	ரூபா
<u>தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்து காசுப் பாய்ச்சல்</u>		-
மொத்த வரி பெறுகைகள்	-	-
கட்டணம், அபராதம், தண்டப்பணம், உரிமங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானமல்லாத பெறுகைகள்	-	-
வேறு தலைப்பு தொடர்பில் திரட்டப்பட்ட வருமானங்கள்	22,817,804	
கட்டுநிதிக் கணக்கு	17,213,285,456	14,579,438,516
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த பாய்ச்சல் (அ)	**17,236,103,260**	**14,579,438,516**

<u>கழி – காசு செலவிடல்</u>		
ஆள்சார் வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவு	152,157,969	259,041,233
மானியம் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள்	16,835,897,448	13,353,692,425
பிற செலவின தலைப்புகளுக்கான செலவினம்	154,964,924	879,021,756
திறைசேரிக்கு செலுத்தப்பட்ட முற்பணம்		
தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (ஆ)	**17,143,020,341**	**14,491,755,414**
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்டதேறிய காசுப்பாய்ச்சல் (இ)= (அ)-(ஆ)	**93,082,919**	**87,683,102**
<u>முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசு</u>		
வட்டி	-	-
பங்கிலாபம்	-	-
சொத்து விற்பனை, பௌதிக ஆதன விற்பனை	-	-
கடன் அறவீடுகள்	-	-
முற்பணங்களை அறவிடுதல்	1,456,308	
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசு (ஈ)	**1,456,308**	**-**
<u>கழி - காசு செலவிடல்:</u>		
பௌதிக சொத்து கொள்வனவு அல்லது நிர்மானம் அல்லது வேறு முதலீடுகளை கையகப்படுத்துதல்	86,559,909	74,957,614
முற்பண கொடுப்பனவு	8,428,986	
முதலீட்டு செயற்பாட்டுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ)	**94,988,895**	**74,957,614**
முதலீட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய காசு (ஊ)=(ஈ)-(உ)	**(93,532,587)**	**(74,957,614)**
தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு (எ)=(இ) + (ஊ)	**(449,668)**	**12,725,488**
<u>நிதி செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்</u>		
உள்நாட்டு கடன்பெறுகை	-	-
வெளிநாட்டு கடன்பெறுகை	-	-

பெறப்பட்ட மானியங்கள்	-	-
வைப்பு கிடைப்பனவுகள்	5,273,811	
நிதி செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டமொத்த காசு (ஏ)	**5,273,811**	**-**
<u>கழி - காசு செலவிடல்</u>		
உள்நாட்டு கடன்பெறுகை மீள்கொடுப்பனவு	-	-
வெளிநாட்டு கடன்பெறுகை மீள்கொடுப்பனவு	-	(3,746,964)
வைப்புக் கணக்கு மற்றும் ஏனைய பொறுப்புகள்	4,824,143	(8,978,524)
நிதி செயற்பாடுக்காக செலவிடப்பட்ட மொத்த காசு (ஐ)	**4,824,143**	**(12,725,488)**
நிதி செயற்பாடிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு (ஒ)=(ஏ)-(ஐ)	**449,668**	**12,725,488**
காசில் தேறிய மாற்றம் (ஓ) = (எ) - (ஒ)	**-**	**-**
சனவரி 01 அன்று ஆரம்ப காசு மீதி	**-**	**-**
டிசம்பர் 31 அன்று இறுதி காசு மீதி	**-**	**-**

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ரூபா.

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு %
2003-02-08	Embarkation Levy	21,000,000,000	24,500,000,000	24,049,292,729	98.16

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா.

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீணடெழும்	14,534,500,000	14,563,700,000	14,176,254,524	97.34
மூலதனம்	13,317,800,000	13,770,800,000	6,794,354,855	49.34

3.7 நீ. பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/மாவட்டச் செயலகம்/மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

ரூபா.

தொடர் இல.	அமைச்சு/ திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீட்டு		உண்மை யான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
	-	-	-	-	-	-

3.8 **நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை**

ரூபா.

ஆமன குறியீடு	**குறியீட்டு விபரம்**	***2019.12.31*** **திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி**	***2019.12.31*** **திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி**	**எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது**	**அறிக்கையிடல் முன்னேற்றம் %**
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	98,705,486	98,705,486	-	100%
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	507,458,752	507,458,752	-	100%
9153	காணி	3,550,306,948	3,874,059,585	323,752,636	
9154	அருவமான சொத்துக்கள்				
9155	உயிரியல் சொத்துக்கள்				
9160	நடைபெறும் பணிகள்	36,660,931,428	36,660,931,428		
9180	குத்தகை சொத்துக்கள்				

3.9 **கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை** **

** பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட இறுதி கணக்காய்வு அறிக்கையினை *(SCAN)* செய்யப்பட்டு இங்கு இணைக்கப்பட வேண்டும்

(இணைப்பு - 1)

அத்தியாயம் 04

செயலாற்றுகை சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	100% - 90%	**75% - 89%**	**50% - 74%**
புகையிரத பிரிவு			
➢ சரக்கு போக்குவரத்து புகையிரத எண்ணிக்கை			√
➢ தினசரி செயற்படுத்தப்படுகின்ற புகையிரத எண்ணிக்கை	√		
➢ பிரதான புகையிரத கருத்திட்டங்களின் எண்ணிக்கை		√	
➢ நிர்மாணிக்கப்பட்ட புகையிரத வீதி (நீளம் கி.மீ)	√		
பேருந்துப் பிரிவு			
➢ வருடாந்த பேருந்துப் பயணிகள் கி.மீ. அளவு	√		
➢ வருடத்தில் செற்படுத்தப்பட்ட சமூக சேவைகள் எண்ணிக்கை	√		
➢ தகவல் தொழில்நுட்பம் அடிப்படையிலான முகாமைத்துவ முறைமையுடன் கூடிய சாலைகளின் எண்ணிக்கை	√		
வாகன ஒழுங்குமுறைப் பிரிவு			
➢ மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை			√
➢ வருடமொன்றுக்கு வெளியிடப்படுகின்ற வாகன புகை உமிழ்வு சான்றிதழ்களின் எண்ணிக்கை	√		
ஏனையவை			
➢ வீதி பாதுகாப்பு தொடர்பாக பொது மக்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	√		
அமைச்சின் செயலாற்றுகைக் குறிகாட்டி			
➢ மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை	√		
➢ பொது போக்குவரத்து சேவையினை வினைத்திறனாக்கும் பொருட்டு செயல்படுத்தப்படுகின்றன கருத்திட்டங்களின் எண்ணிக்கை	√		
➢ அலுவலர்களின் இயலலளவினை மேம்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ள பயிற்சிகளின் எண்ணிக்கை	√		
➢ பாராளுமன்றத்துக்கு வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளின் எண்ணிக்கை	√		
➢ அமைச்சுக்கு கிடைக்கப்பெறும் திறைசேரி நிதி ஏற்பாடுகளிலிருந்து செலவு செய்யப்படுகின்ற			√

சதவீதம் ➢ வருடத்துக்குள் பேணப்பட்டுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு எண்ணிக்கை ➢ பதில்கள் வழங்கப்பட்டுள்ள பொதுமக்கள் முறைப்பாடுகளின் எண்ணிக்கை (%) ➢ அமைச்சின் மூலம் மாதாந்தம் மற்றும் காலாண்டு ரீதியாக உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளின் எண்ணிக்கை	√ √ √		

அத்தியாயம் 05

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டுக

இலக்கு /குறிக்கோள்	அடைவுகள்	குறிகாட்டிகள்	இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம்		
			0% - 49%	**50% - 74%**	**75% - 100%**
ஆரோக்கியமான வாழ்க்கையொன்றினை உறுதிபடுத்தி அனைத்து வயதுகளிலுமுள்ள அனைவரினதும் நலனை மேம்படுத்துதல்	2030 ஆம் ஆண்டாகும் போது நெடுஞ்சாலைகளில் விபத்துக்களின் மூலம் இடம்பெறுகின்ற காயங்கள் மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையினைக் குறைத்தல்	மரண விகிதாசாரம்			
நகரங்கள் மற்றும் குடியிருப்புகள் பூரணத்துவம் பெற்ற, பாதுகாப்பான, வலுவான மற்றும் நிலைத்திருக்கக்கூடிய வகையில் தயாரித்தல்	குறிப்பாக இடர்பாடுகள் ஏற்பட முடியுமான நிலைமைகளிலிருக்கும் பெண்கள் , குழந்தைகள் , மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதியவர்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டு நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பினை மேம்படுத்துதல், பொது, 2030 போக்குவரத்து முறைமை கணிஷமானவில் விஷ்தரிப்பதன் மூலம் 2030 ஆம் ஆண்டாகும் போது அனைவருக்கும் பாதுகாப்பான குறைந்த விலைக்கு பெற்றுக் கொள்ள முடியுமான அணுகக்கூடிய மற்றும் நிலைப்பேறான போக்குவரத்து முறைமையை வழங்குதல்.	1. சரக்குப் போக்குவரத்து புகையிரத எண்ணிக்கை 2. தினசரி போக்குவரத்து செய்கின்ற புகையிரத எண்ணிக்கை 3. பிரதான புகையிரத கருத்திட்டங்களின் எண்ணிக்கை 4. நாளாந்தம் பேருந்து பயணிகள் கிலோ மீட்டர் அளவு 5. IT முகாமைத்துவம் அடிப்படையாகக் கொண்ட இலங்கை போக்குவரத்துச் சபையின் சாலைகளில் எண்ணிக்கை 6. மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்திய கருத்திட்டங்களின் எண்ணிக்கை		1. √ 6. √	2. √ 3. √ 4. √ 5. √

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக

போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சின் மூலம் நிலைப்பாட்டு அபிவிருத்தி இலக்குகள் அடிப்படையில் 2030 ஆம் ஆண்டில் வினைத்திறன் வாய்ந்த போக்குவரத்து சேவையினை நிறுவும் பொருட்டு தேவையான திட்டமிடல்கள் தயாரிக்கப்பட்டு வருவதுடன் அதற்காக சாத்தியதன்மை வாய்ந்த நடவடிக்கைகள் பல தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமைச்சின் மூலம் செயற்படுத்தப்பட்ட மாத்தறை பெலிஅத்தை புகையிரத வீதி கருத்திட்டம், கொழும்பு புறநகர் புகையிரத வீதி கருத்திட்டம் , குருணாகலை ஹபரணை புகையிரத வீதி கருத்திட்டம் போன்ற பாரிய கருத்திட்டங்கள் மூலம் புகையிரத வினைத்திறன் அதிகரிக்கப்படுவதுடன் புகையிரத தொகுதிக்காக புதிய புகையிரத இணைப்புகள் சேர்ப்பதன் மூலம் பொது போக்குவரத்து பலப்படுத்தப்படும். 2019ஆம் ஆண்டுக்குள் அமைச்சின் மதியுரையின் பிரகாரம் பிரதான வீதிகளில் பொதுவான புகையிரதங்கள் மற்றும் கடுகதி புகையிரதங்கள் பல போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கு புகையிரத திணைக்களத்திற்கு முடியுமாக இருந்தது.

அதேபோன்று போக்குவரத்துடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களின் பங்கேற்பினைப் பெற்று நாடு பூராவும் பேருந்து போக்குவரத்து நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக கொள்கை திட்டமிடல், சட்டங்கள் திருத்தம், அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் காலத் தேவைபாட்டிற்கமைய மேற்கொள்ளப்பட்டது. இங்கு சிசு செறிய, கெமிசெறிய மற்றும் நிசிசெறிய பேருந்துகளை போக்குவரத்தில் ஈடுபடுத்துதல், பேருந்து தரப்படுத்துதல் பேருந்து பதவிகளுக்கு பயிற்சி வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், வீதி பாதுகாப்பு தொடர்பாக வாகன உரிமையாளர்கள் பொதுமக்களுக்காக விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் பல கடந்த வருடத்துக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

போக்குவரத்துடன் தொடர்புடைய கருத்திட்டங்களை செயல்படுத்தும்போது சவால்கள் பலவற்றினை இந்த அமைச்சு எதிர்கொண்டுள்ளது. குறிப்பாக பாரிய மூலதன கருத்திட்டங்களுக்காக வெளிநாட்டு முதலீடுகள், நிதிசார் வசதிகள் பெற்றுக் கொள்வதிலுள்ள சிக்கல்கள், வேலை நிறுத்தப் போராட்டங்கள் , ஊழியர்கள் பிரச்சினைகள் காணிப் பிரச்சினைகள், அரசியல் உறுதித்தன்மை முக்கியத்துவம் பெறுவதுடன் போக்குவரத்துக்காக ஆராய்ச்சிகளில் குறைப்பாடுகளும் இது குறித்து தாக்கம் விளைவித்துள்ளது.

அத்தியாயம் 06

மனித வள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம் (அதிகப்படியான)**
சிரேட்ட	33	26	7
மூன்றாம் நிலை	5	5	0
இரண்டாம் நிலை	133	99	34
ஆரம்ப நிலை	77	63	14

6.2 ** பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக

அமைச்சின் தூரநோக்கு மற்றும் செயற்பணியினை நிறைவேற்றும் பொருட்டு இலக்காகக் கொண்ட நோக்கங்களை அடையும்போது மனிதவளங்களிலுள்ள பற்றாக்குறை நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு ஏற்படும் காலத்தினை நீட்டிக்கும் பொருட்டான இயலுமை உண்டு.

6.3 மனித வள அபிவிருத்தி

Name of the Program	No. of staff trained	Duration of the program	Total Investment (Rs'000)		Nature of the Program (Foreign /Local)	Output/ Knowledge Gained *
			Local	Foreign		
Regional Cooperation Program	01	03.03 – 03.18	-	160,290.77	Foreign	
ICAO Regional Facilitation Implementation Semminar	01	03.11 – 03.16	-	36,645.60	Foreign	
Annual Country Consultation with Asian Development Bank	01	03.13 – 03.17	-	525,400	Foreign	
Meeting of the SASEC nodal officials	01	03.17 – 03.20	-	-	Foreign	
Workshop on Towards of the Establishment of a Road Safety observatory in Asia	01	03.20 – 03.22	-	55,173	Foreign	
ERA Facilities to attend a presentation on WAM System Implementation	01	05.28 – 06.01	-	396,267.03	Foreign	
Expert Group Meeting on the	01	03.31 –	-	36,165.65	Foreign	

Innovative and Integrated Intelligent Transport System (ITS) for the Development and Operation of Sustainable Transport System in Urban Areas		04.05				
ICAO Air Transport Symposium & conference on International Air Transport Cooperation	01	05.07 – 05.11	-	36,264.66	Foreign	
Asia Pacific Railway Innovation Forum	02	05.20 – 05.22	-	138,463.78	Foreign	
75th Session of the Economic and Social Commission for Asia and the Pacific	01	05.26 – 06.01	-	618,816	Foreign	
Green Freight Logistics and Development	01	05.19 – 06.02	-	100,698.29	Foreign	
Global NDC Conference 2019 inspiring action and enabling change	01	06.10 – 06.15	-	66,937.44	Foreign	
Sub regional workshop on ICT Co- development along passive infrastructure in South Asia	01	06.26 – 06.28	-	18,283	Foreign	
2019 South & Southeast Asia – Air improvements in the region Annual Meeting	02	07.29 – 08.02	-	522,354.51	Foreign	
European Capacity Building initiative Regional training workshop	01	07.30 – 08.03	-	21,900	Foreign	
Green climate fund global programming conference	01	08.17 – 08.25	-	67,131	Foreign	
Theme forum of 2019 Guangdong 21st century maritime silk road international Expo	02	08.20 – 08.24	-	188,527.30	Foreign	
Third session of the Asia – Pacific information superhighway (AP-IS) Steering committee	01	08.25 - 08.30	-	10,475.52	Foreign	
Total planning of airport construction, management and maintenance	01	08.24 – 08.29	-	236,741.56	Foreign	
Seminar on China's development experience & reform and opening – up policies for Sri Lanka	01	09.02 – 10.02	-	221,720	Foreign	
The 40th session of the international civil aviation	02	09.22 – 10.07	-	1,974,191	Foreign	

organization (ICAO) assembly						
Seminar on Building smart cities under belt & road initiatives	01	10.10 – 10.30	-	163,039.69	Foreign	
6th meeting of SAARC Inter governmental group of transport	02	11.18 – 11.21	-	221,930.22	Foreign	
Seminar on transport infrastructure planning & development for Sri Lanka	03	12.10 – 12.23	-	406,071.69	Foreign	
Seminar on management of International Engineering projects for Sri Lanka	01	12.10 – 12.31	-	171,193.94	Foreign	
Diploma in Tamil	01	06 Months	16,500	-	Local	
Computer Hardware & PC maintenance	01	02 Days	13,000	-	Local	
Post – Graduate Course on public administration	01	02 Years	185,000	-	Local	
Certificate in public procurement management (CPPM)	02	05 Days	52,000	-	Local	
Public financial regulations	01	01 Day	18,000	-	Local	
Special workshop on SLPSAS	02	04 Days	32,000	-	Local	
Establishment procedure and office management course	03	04 Days	135,000	-	Local	
Advanced MS Excel	01	02 Days	13,000	-	Local	
Advanced MS Excel Skills	03	02 Days	39,000	-	Local	
Fundamentals of Computers	02	03 Days	36,000	-	Local	
ILETS	01		25,100	-	Local	
Total Investment			**564,600**	**6,394,681.65**		

**** நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை சுருக்கமாக விளக்குக***

அமைச்சின் நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதன் மூலம் அமைச்சிற்குள் அவர்களுக்குரிய கடமைகள் மிகவும் திருத்தமான முறையிலும் வினைத்திறன் வாய்ந்த முறையிலும் மேற்கொள்வதற்கு இயலுமை கிடைத்துள்ளது. மேலும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்பதன் மூலம் பெறுகின்ற அனுபவங்கள் அவர்களது கடமைகளில் ஈடுபடும்போது பிரயோகித்துக் கொள்வதற்கும் மற்றும் அதன்மூலம் வினைத்திறன் மேம்படுத்துவதும் இடம்பெறுகின்றது. அதேபோன்று வெளிநாட்டுப் பயிற்சிகள் கிடைப்பதன் மூலம் அலுவலர்களுக்குள் தன்முனைப்பாற்றல் இடம்பெறுவதுடன் ,அதனூடாக பெற்றுக்கொள்ளப்படும் அறிவு மற்றும் திறமைகளைப் பயன்படுத்தி போக்குவரத்து துறையில் அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கு இயலுமைக் கிடைத்துள்ளது. (அதனுடன் தொடர்புடைய சான்றிதழ்கள் மற்றும் அறிக்கைகள் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.)

அத்தியாயம் 07

இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது /இணக்கமற்றது)	இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதி னை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
1	**பின்வரும் நிதி அறிக்கைகள்/கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரசு அலுவலர்கள் முற்பணக் கணக்கு	இணக்கமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்)	-		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	-		
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	-		
1.6	ஏனைய	-		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி. 445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு/தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.9	இழப்பு பதிவேட்டினை			

	புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் *(GA – N20)* பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. *135*)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது	இணக்கமானது		
3.4	*2014.05.11* திகதிய அரசு கணக்கு சுற்றறிக்கை இல. *171/2004* இன் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை	இணக்கமானது		
4	**வருடாந்த திட்டத்தனைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை வ.செ.தி. திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
6	**உள்ளகக் கண்காய்வு**			

6.1	நி.பி. 134 (2) DMA/1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்	இணக்கமானது		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரவு 40(4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்	இணக்கமானது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**	இணக்கமானது		
7.1	DMA 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காண்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன	இணக்கமானது		
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2017 சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்	இணக்கமானது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும் அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்	இணக்கமானது		
8.3	அரசு நிதி சுற்றறிக்கை இல. 05/2016 இன்படி பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணக்கமானது		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த	இணக்கமானது		

	கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன			
8.5	நி.பி. 772 இன்படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	இணக்கமானது		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளை தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி. 103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதலவேண்டும்	இணக்கமானது		
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்	இணக்கமானது		
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்கைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்	இணக்கமானது		
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்டசெயற்படாத வங்கிக் கணக்குகளனைத் தீர்த்தல்	இணக்கமானது		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட வேண்டிய நிலுவைகள வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாத்த்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்	இணக்கமானது		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			

11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	இணக்கமானது		
11.2	நி.பி. 94(1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத போறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்	இணக்கமானது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	இணக்கமற்றது	சட்டரீதியான நடவடிக்கைக ளை எடுத்தல்	
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நீ.பி. 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	இணக்கமானது		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
14	**முன்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் உறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	இணக்கமானது		
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல் அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்	இணக்கமானது		
14.3	நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்	இணக்கமானது		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
15	**வருமான கணக்கு**			
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்	இணக்கமானது		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக	இணக்கமானது		

	வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்			
15.3	நி.பி. 175 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணக்கமானது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	இணக்கமானது		
16.3	2017.09.20 தேதியிட்ட எம்.எஸ்.டி.. சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணக்கமானது		
17	**பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்	இணக்கமானது		
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துக்கள்/ குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல்	இணக்கமானது		
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்	இணக்கமற்றது	அறிமுகப்படுத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட மாதிரிகளுக்கமைய 2019 வருடத்துக்காக எதிர்காலத்தில் இந்த அறிக்கைகளைக் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படும்.	
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்துதல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 5 / 2008 மற்றும் 5 /2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்	இணக்கமற்றது	அமைச்சுகளின் மாற்றங்கள் , அமைச்சின் நோக்கெல்லை மாற்றங்கள், நிர்வாகத்தின் மற்றும் பதவியணியினரின் மாற்றங்கள் காரணமாக இந்த நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டிருப்பதுடன் எதிர்காலத்தில் இதற்குரிய நடவடிக்கைகள்	
18.2	சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொருத்தவரை, பிரசைகள் பட்டயம் /பிரசைகள்	இணக்கமற்றது		

	வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது		மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும்.	
19	***மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்***			
19.1	*2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்*	இணக்கமற்றது	அமைச்சுகளின் மாற்றங்கள், அமைச்சின் நோக்கெல்லை மாற்றங்கள், நிர்வாகத்தின் மற்றும் பதவியணியினரின் மாற்றங்கள் காரணமாக இந்த சுற்றுநிறுபத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டிருப்பதுடன், எதிர்காலத்தில் இதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும். ஆனாலும் பதவியணியினருக்காக அவர்கள் எதிர்பார்க்கின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகளுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.	
19.2	*ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்*	இணக்கமற்றது		
19.3	*மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது*	இணக்கமற்றது		
19.4	*மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்துதல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரி நியமித்தல்*	இணக்கமற்றது		
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்தல்	இணக்கமானது		